**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஐப்பசித்திங்கள் 10ம் நாள்

**இ.ம.எண். 4/2025**

**in**

**அ.வ.எண். 76/2023**

1. கே.சிவாசலம்
2. எஸ்.பானுமதி ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

கே.ஜெகதீஸ்குமார் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.10.2025ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஈஸ்வரமூர்த்தி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வெங்கடசுப்பு, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு தகுந்த

உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்ததில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வந்தபோது எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது மனுதாரர்களின் கிரைய சொத்தின் விபரங்களை தெளிவாக காட்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் விடுபட்ட விபரம் வழக்கின் விசாரணைக்கு தயாராகி கொண்டிருந்தபோது தான் தெரிய வந்தது.

ii) மேற்படி சங்கதிகள் குறித்து மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாவிட்டால் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதால் மேற்படி சங்கதிகளை பொறுத்து தேவையான ஆவணங்களை பார்த்து மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி இருந்ததால் மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தயார் செய்து தாக்கல் செய்ய காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. மேற்படி மனுதாரர்களின் கூடுதல் எதிர்வழக்குரை இல்லாவிட்டால் வழக்கின் சராம்சத்தையும் எதிர்மனுதாரரின் செயல்களையும் நிரூபிக்க இயலாமல் போய்விடும். மனுதாரர்கள் வேண்டுமென்றே காலதாமதம் செய்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரர்கள்

தரப்பில் அசல் வழக்கில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:—**

i) மனுதாரர்கள் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) அசல் வழக்கில் மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வாதிகள் தரப்பு சாட்சியம் விசாரணை தொடங்கப்பட்ட பின்னிட்டு மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இம்மனு தாக்கல் செய்துள்ளார்கள். ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே மீண்டும் கூடுதல் எதிர்வழக்குரையில் கூறி அனுமதி கோரும் இம்மனு செல்லத்தக்கதல்ல. மனுதாரர்கள் வழக்கு விசாரணையை இழுத்தடிக்கும் எண்ணத்தில் இம்மனுவை காலம் கடத்து தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்தும் அதில் கண்டுள்ள பாதைகளும் எதிர்மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட அடிநில உரிமை பூமியாகும். அதை எதிர்மனுதாரர்கள் தங்கள் விருப்பம்போல் அனுபவிக்க உரிமை இல்லை. எனவே கூடுதல் எதிர்வழக்குரையை அனுமதிக்க கோரும் இம்மனு ஏற்புடையதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது மனுதாரர்களின் கிரைய சொத்தின் விபரங்களை தெளிவாக காட்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் விடுபட்ட விபரம் வழக்கின் விசாரணைக்கு தயாராகி கொண்டிருந்தபோது தான் தெரிய வந்தது என்றும் மேற்படி மனுதாரர்களின் கூடுதல் எதிர்வழக்குரை இல்லாவிட்டால் வழக்கின் சராம்சத்தையும் எதிர்மனுதாரரின் செயல்களையும் நிரூபிக்க இயலாமல் போய்விடும் என்றும் எனவே அசல் வழக்கில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே மீண்டும் கூடுதல் எதிர்வழக்குரையில் கூறி அனுமதி கோரும் இம்மனு செல்லத்தக்கதல்ல என்றும் மனுதாரர்கள் வழக்கு விசாரணையை இழுத்தடிக்கும் எண்ணத்தில் இம்மனுவை காலம் கடத்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் தாவா சொத்துக்களைப் பொறுத்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 04.11.2023 அன்று பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 29.07.2024 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 18.07.2025 அன்று வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அசல் வழக்கானது வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 31.07.2025 அன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது மனுதாரர்களின் கிரைய சொத்தின் விபரங்களை தெளிவாக காட்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் விடுபட்ட விபரம் வழக்கின் விசாரணைக்கு தயாராகி கொண்டிருந்தபோது தான் தெரிய வந்தது என்றும் மேற்படி சங்கதிகளை பொறுத்து தேவையான ஆவணங்களை பார்த்து மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி இருந்ததால் மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தயார் செய்து தாக்கல் செய்ய காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவோடு தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை பரிசீலிக்கும்போது ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள

எதிர்வழக்குரைக்கு முரணாகவோ அதில் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை திரும்ப பெறும் வகையிலோ இல்லை.

8. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே மீண்டும் கூடுதல் எதிர்வழக்குரையில் கூறி அனுமதி கோரும் இம்மனு செல்லத்தக்கதல்ல என்றும் மனுதாரர்கள் வழக்கு விசாரணையை இழுத்தடிக்கும் எண்ணத்தில் இம்மனுவை காலம் கடத்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்கள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பை வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியம் என்பதாலும் கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளைப் பொறுத்து நிரூபணம் செய்யும் பொறுப்பு மனுதாரர்கள் வசமே உள்ளது என்பதாலும் மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பொறுத்து இரு தரப்பு விசாரணைக்கு பின்னிட்டு இறுதியாகத்தான் தீர்மானம் செய்ய முடியும் என்பதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் கருதினாலும் அசல் வழக்கானது வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும்

காலவிரயம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. 1, 2 மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும் எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.1,000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) செலவு தொகையாக வரும் 03.11.2025ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 03.11.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.10.27 19:13:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.10.27 19:13:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.